

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2023) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் நடைப்பெற்று வரும் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் பொதுப்பணி துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத் தரத்தில் தொழில்நுட்பக் கல்வி - மைக்ரோ சாஃப்ட்டுடன் ஒப்பந்தம்!

# அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

## "கல்வியிற் சிறந்த தமிழரெனப் பார்போற்றப் பாடுபடுவோம்!" எனப் பதிவு!

**சென்னை, ஜூலை 9-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்றுமுன்தினம் விடுத்த சமூக வலைதளப் பதிவொன்றில், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத் தரத்தில் தொழில்நுட்பக் கல்வி வழங்கிட 'மைக்ரோ சாப்ட்' நிறுவனத்துடன் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை ஒப்பந்தம் மேற்கொண்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழியைப் பாராட்டியுள்ளார்.**

**'கல்வியிற் சிறந்த தமிழரெனப் பார் போற்றப் பாடுபடுவோம்!' என அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



தம்பி அன்பில் மகேஸ் அவர்கள், அமெரிக்கப் பயணத்தின்போது, ஊரகப் பகுதி மாணவர்களுக்கு உலகத்தரத்திலான தொழில்நுட்பக் கல்வி அறிமுகத்தை வழங்க Microsoft உடன் இணைந்து தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை மேற்கொள்ளும் முன் முயற்சிகளைப் பற்றி என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார்.

தமிழர்களின் இதயத் துடிப்பான கல்வியை உலகத்தரத்திற்கு உயர்த்துவதே நமது திராவிட மாடல் அரசின் இலக்கு. அதற்கான பணிகளில் ஈடுபடும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்!

கல்வியிற்சிறந்த தமிழரெனப் பார் போற்றப் பாடுபடுவோம்!

இவ்வாறு அப்பதிவில் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2023) சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்களின் மகள் பிரதிக்ஷா ஜெ.ஆர். நவமணி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அன்புமணி ராமதாஸ், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், செல்வி ஜோதிமணி, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.



மதுரையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூலகத்தை வருகிற 15ந்தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார். அதற்கான தயார் நிலை குறித்து பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்ட போது எடுத்தபடம். உடன் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், பொதுப்பணித்துறை அரசு முதன்மை செயலாளர், பொது நூலகத்துறை இயக்குநர், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன் உட்பட பலர் உள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி பிறந்த நாள்!

# 'உங்களின் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் அனைவருக்கும் ஊக்கமளித்து தொடர்ந்து ஒளி வீசிடுக!'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூலை 9-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள செய்தியில், "உங்கள் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் அனை வருக்கும் ஊக்கமளித்து தொடர்ந்து ஒளி வீசிடுக!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

இந்திய கிரிக்கெட் அணி யின் முன்னாள் கேப்டன், என்றென்றும் சி.எஸ்.கே. அணியின் தல எனப் போற்றப்படும் எம்.எஸ். தோனி அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

உங்கள் சாதனைகள் மற்றும் உங்கள் எளிமையான தொடக்கங்கள் இந்தியா முழுவதும் உள்ள எண்ணற்ற இளைஞர்களின் வாழ்க்கை யில், குறிப்பாக சாதாரண பின்னணியிலிருந்து வந்த வர்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.



உங்கள் ஈடு இணையற்ற தலைமைப் பண்புகளால் நீங்கள் தொடர்ந்து ஒளி வீசிடவும், அனைவருக்கும் ஊக்கமளிக்கவும் வாழ்த்து கிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



அஸ்ஸாம் மாநிலத்தில் சுமான் ஸ்ரீ ஆற்றின் குறுக்கே மின் உற்பத்திக்கான அணை கட்டும் பணியை நிலைக்குழு உறுப்பினர்களுடன், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், எரிசக்தி துறை பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

செஞ்சி பேரூராட்சியில்!

# புதிய மேம்பாலங்கள்கட்டுவதற்கான இடங்கள்!

## அமைச்சர் செஞ்சிமஸ்தான் நேரில் ஆய்வு!

*செஞ்சி, ஜூலை 9-*

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி 18 வது வார்டுசக்கராபுரம் செல்லும் சாலையில் பொன் பத்தி ஏரி கோடி போகும் இடத்தில் உள்ள மேம்பாலம்பழுதடைந்து உள்ளதையடுத்துஅப்பகுதி பொதுமக்கள் புதிய மேம் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களிடம் கோரிக்கை மனுவழங்கினர்.

'கோரிக்கையைஏற்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் அதிகாரிகளுடன் பழுதடைந்த மேம்பாலத்தை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து திண்டிவனம் சாலையில் புதிய மேம்பாலம் அமைப்பதற்கு அமைச்சர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போதுபேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், செயல் அலுவலர் செந்தில்குமார், விழுப்புரம் வடக்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், நகர செயலாளர் கார்த்திக், துணைச் செயலாளர் செயல் மணி, பேரூராட்சி மன்ற கவுன்சிலர் மோகன், பேரூராட்சி உதவி பொறியாளர் சுப்பிரமணியன், வார்டு செயலாளர் தனசேகரன், தொண்டரணி பாஷா அவைத்தலைவர் வாசு, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ரமேஷ், செந்தில்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம்!

# கீரமங்கலம், திருவரங்குளம் ஒன்றியப் பகுதிகளில்வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

*புதுக்கோட்டை, ஜூலை 9-*

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி மற்றும் திரு வரங்குளம் ஒன்றியப் பகுதிகளில், வளர்ச்சித் திட்டப் பணிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் (3.07.2023) அன்று துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன்தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் நலனிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், கீரமங்கலம் பேரூராட்சியில், ரூ.10 இலட்சம் மதிப்பிலான பயோ மைனிங் முறையில் குப்பைகளை பிரித்தெ டுக்கும் இயந்திரம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடகாடு ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர்தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, பராநகர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.25 இலட்சம் பதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கான பணியினையும் மற்றும் வடக்கிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கான பணியினையும் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் தமிழக அரசின் கல்வித் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர்

இளவரசி, ஒன்றிய குழு உறுப்பினர் கே.எம்.ரவி, ஸ்ரீதேவி அண்ணாத்துரை, கே.வி.சுப்பையா, ஆ.பழனிக்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் மா.நடேசன், செங்கோல், ஊராட்சிமன்றத் தலைவர் எம். மணிகண்டன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அஸ்ஸாம் மாநிலத்தில்!

# மின் உற்பத்திக்கான அணைக்கட்டும் பணி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி ஆய்வு !

நாமக்கல், ஜூலை 9-

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எரிசக்தி துறைக்கான பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினராக இருக்கிறார். அஸ்ஸாம் மாநிலம் திப்ருகர் அருகே சுமான் ஸ்ரீ ஆற்றின் குறுக்கே வெள்ள தடுப்புக்காகவும், மின்சார உற்பத்திக்காகவும் அணை கட்டப்பட்டு வருகிறது. இந்த அணையை எரிசக்தி துறைக்கான பாராளுமன்ற நிலை குழு ஆய்வு செய்து வருகிறது. குழுவின் உறுப்பினரான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி குழுவினருடன் சென்று அணையை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இத்திட்டமானது 2 ஆயிரம் மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யக் கூடியதாகும். இது இந்தியாவின் மிகப்பெரிய ஹைட்ரோ கார்பன் திட்டம் ஆகும். இந்த நிலைக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கலந்து கொண்டார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## குழந்தை தமிழரசன்

**ஜூலை 9 (2020)**



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கல்லூரி மாணவர் பேரவை தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியதோடு, பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், தீர்மானக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**1996ல் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**